சுருக்கம்

நிலமாற்றம் - அருப்புக்கோட்டை நகராட்சி நிலமாற்றம் - நகராட்சிக்கு சொந்தமான வார்டு ஜி, பிளாக் 10, டிஎஸ்.எண்.19-இல் உள்ள 1588 சதுர மீட்டர் இடம் மற்றும் அதில் இயங்கிவரும் தாய் சேய்நல விடுதியினை இணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், விருதுநகர் அவர்களுக்கு தானமாக நிலமாற்றம் செய்தல் - ஆணை -வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5) துறை

அரசாணை (நிலை) எண்: 153 நாள்: 8.08.2008

(திருவள்ளுவர் ஆண்டு 2039, ஆடி 24)

படிக்க:

1. அரசாணை(நிலை)எண்.35,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.2.1997.
2. அரசாணை (நிலை)எண். 459, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 27.12.2007.
3. நகராட்சி நிர்வாக ஆணையரின் ஆர்.ஓ.சி.எண்.54040/07/ டிபி3, நாள் 3.12.2007.

---

ஆணை:

தமிழ்நாடு சுகாதார முறை திட்டத்தின் கீழ் அருப்புக்கோட்டை மருத்துவமனை உள்ளிட்ட 12 இரண்டாம் நிலை மருத்துவமனைகளை மேம்படுத்த 2134.27 இலட்சங்களை அனுமதித்து இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. அருப்புக்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான சாதுதரா. ஆவுடையம்மாள் தாய் சேய் நல விடுதியினை அரசு மருத்துவமனையுடன் இணைத்து விரிவாக்கம் செய்ய, வார்டுஜி, பிளாக்-10, டிஎஸ்.எண்.19-இல் அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான 1,588 சதுர மீட்டர் (5206.64 ச.அடி) உள்ள இடம் அதிலுள்ள 1,134 ச.அடி ஆர்.சி.சி கட்டடம் மற்றும் 1,199 ச.அடி (AC roof) ஏ.சி. கூரைக் கட்டிடம், 950 சதுர அடி ஏ.சி கூரை சத்துணவு மையம் ஆகியவற்றினை இணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், விருதுநகர் அவர்களுக்கு தானமாக பெயர்மாற்றம் செய்யவும், புதிதாக கட்டப்படவுள்ள கட்டிட வளாகத்திற்கு முந்தைய நன்கொடையாளரான சாது தரா. ஆவுடையம்மாள் நினைவாக அவரது பெயரைச் சூட்டவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது அதன்படி அருப்புக்கோட்டை நகர்மன்றத்தின் தீர்மான எண். 336 நாள் 7.8.2006-இன் அடிப்படையிலும், பொதுமக்களின் நலனுக்காக அருப்புக்கோட்டை இரண்டாம் நிலை மருத்துவமனையினை விரிவாக்கம் செய்து அரசு பொது மருத்துவமனையாக தரம் உயர்த்த உத்தேசித்துள்ளதை கருத்தில் கொண்டும், இதனை சிறப்பினமாக கருதி, அருப்புக்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான வார்டு.III, பிளாக் 10, டி.எஸ். என். 19-இல் மொத்த விஸ்தீரணம் 1588 சதுர மீட்டர் (5208.64 ச.அடி) உள்ள இடம் மற்றும் அதிலுள்ள 1,134 ச.அடி ஏ.சி. சி கூரைக் கட்டிடம் (AC Roof) மற்றும் 950 சதுர அடி ஏ.சி கூரை சத்துணவு மையம் ஆகியவற்றினை முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் நிலமாற்றம் தொடர்பான அனைத்து விதிகளையும் தளர்வு செய்து நிலக்கிரயமின்றி நகராட்சி தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் விருதுநகர் மாவட்டம் அவர்களுக்கு வழங்க அருப்புக்கோட்டை நகராட்சிக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி/

கே. தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம்,சென்னை-600 005.
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை -600 005.
மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம்.
நகர்மன்றத் தலைவர்,அருப்புக்கோட்டை நகராட்சி, விருதுநகர் மாவட்டம்.
நகராட்சி ஆணையர், அருப்புக்கோட்டை நகராட்சி.
அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் (நகர்மன்றத் தலைவர் வழியாக)
இணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், விருதுநகர் மாவட்டம்.
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரமுறை திட்டம், சென்னை-600 006.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவப் பணிக் கழகம்,
சென்னை-600 008.

நகல்:

முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை -600 009.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் நேர்முக
உதவியாளர், சென்னை -600 009,
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, சென்னை-600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சரின் நேர்முக
உதவியாளர், சென்னை -600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அரு2) துறை, சென்னை-600 009.
நிதித் துறை(நகராட்சி நிர்வாக (ம)குடிநீர் வழங்கல்) துறை, சென்னை- 600 009.
வருவாய்த் துறை, சென்னை-600 009.
பொதுத் துறை, சென்னை -600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 8/8/08